# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No. 136/2021.
Prosecution witness for P.W.10.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு.சீனிவாசன். | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 27.02.2026.

Accused present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மனநல பிரிவில் உதவி பேராசிரியராக பணியில் இருந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் அதே பிரிவில் உதவி பேராசிரியராக பணியில் இருந்தபோது 24.12.2020 அன்று ஆஜர் எதிரியை போலீசார் மேற்படி மருத்துவமனைக்கு மனநிலை பரிசோதனைக்காக அழைத்து வந்தார்கள். நான் பரிசோதித்ததில் ஆஜர் எதிரிக்கு மனநிலை பாதிப்பு இருந்தது தெரியவந்தது. அதனால் ஆஜர் எதிரியை உள்நோயாளியாக அனுமதித்து நான் சிகிச்சை அளித்தேன். அவரை 10 நாட்கள் மருத்துவ கண்காணிப்பில் வைத்திருந்தோம். அப்போது ஆஜர் எதிரிக்கு மனநோய் இருந்தது. ஆஜர் எதிரிக்கு குடிப்பழக்கமும், கஞ்சா பழக்கமும் இருந்ததாக ஆஜர் எதிரியே சொன்னார். அவரது பழைய மருத்துவ ஆவணங்களிலும் ஆஜர் எதிரிக்கு குடிப்பழக்கம் மற்றும் கஞ்சா பழக்கம் இருந்ததாக சொல்லப்பட்டிருந்தது. எதிரி முழுமையாக குணமடையவில்லை என்பதால் அவருக்கு தொடர்ந்து சிகிச்சை தேவைப்பட்டதால் சென்னை கீழ்ப்பாக்கம் அரசு

மனநல காப்பகத்திற்கு பரிந்துரைத்தேன். அதுகுறித்து நான் வழங்கிய அறிக்கை **அ.சா.ஆ 10**. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

போலீஸ் விசாரணையில் ஆஜர் எதிரிக்கு குடிப்பழக்கம், கஞ்சா பழக்கம் இருந்ததாக சொன்னேன். காவல்துறை அதிகாரிகள் யாரும் என்னை விசாரிக்கவில்லை.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

MUNISWAMI THANDAVAN

Digitally signed by MUNISWAMI THANDAVAN
Date: 2026.02.27 17:39:17 +0530

I Additional District & Sessions Judge,
Thoothukudi.

**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No. 136/2021.
Prosecution witness for P.W.11.

| | | | |
|---|---|---|---|
| Name | ... **திரு.சோமசுந்தரம்.** | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 27.02.2026.

Accused present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது சங்கரன்கோவில் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் உதவியாளராக பணியில் இருந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு கோவில்பட்டி 2வது குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் சுருக்கெழுத்து தட்டசராக பணியில் இருந்தபோது கூடுதல் பொறுப்பாக தலைமை எழுத்தர் பொறுப்பையும் கவனித்து வந்தேன். 04.01.2021 அன்று எட்டையபுரம் காவல்நிலைய குற்ற எண் 322/2020 இதச 294(பி), 302 வழக்கு சம்பந்தப்பட்ட வெள்ளை நிற வேட்டி, ரத்தக்கறை படிந்த வெள்ளை நிற முழுக்கை சட்டை, ரத்தக்கறை படிந்த SKC என்று எழுதப்பட்ட அரக்கு கலர் ஜட்டி ஒன்று, ரத்தக்கறை படிந்த, படியாத சிமெண்ட் தரையின் துண்டுகள், இருபுறமும் இரும்பு பூணுடன் கூடிய மரத்தால் செய்யப்பட்ட உலக்கை ஒன்று அதில் ஒருபுறம் ரத்தக்கறை படிந்திருந்தது. ரத்தக்கறை படிந்த கருநீலநிற முழுக்கை சட்டை, ரத்தக்கறை படிந்த ஊதா மற்றும் கருப்பு நிற கோடுபோட்ட வெள்ளை நிற லுங்கி ஆகியவற்றையும் படிவங்கள் 91ன் மூலம் பெற்று PR.No.1/2021 என்ற எண்ணிட்டு நீதிமன்ற பாதுகாப்பில் வைத்தேன். மேற்படி படிவங்கள் 91 **அ.சா.ஆ.11 வரிசை** (எண்ணிக்கையில் 3).

மேற்படி உலக்கை **சா.பொ.3**. மேற்படி வெள்ளை நிற வேட்டி மற்றும் சட்டை **சா.பொ.4 மற்றும் 5**. மேற்படி ஜட்டி **சா.பொ.6**. மேற்படி ரத்தம்பட்ட மற்றும் ரத்தம்படாத சிமெண்ட் துண்டுகள் **சா.பொ.7 மற்றும் 8**. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

நான் வழக்கு சொத்துக்களை சரிபார்க்காமல் மேற்படி படிவங்களுக்கு PR.No.கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால்தான் சொத்துக்களை கைப்பற்றிய தேதியிலிருந்து 10 நாட்களுக்கு பிறகு வழக்கு சொத்துக்கள் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டன என்றால் சரியல்ல. நான் அரசு ஊழியல் என்பதால் போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

MUNISWAMI THANDAVAN
Digitally signed by MUNISWAMI THANDAVAN
Date: 2026.02.27 17:39:25 +0530

I Additional District& Sessions Judge,
Thoothukudi.

## DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No. 136/2021.
Prosecution witness for P.W.12.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. புருசோத்தமன். | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 27.02.2026.

Accused present.

முதல் விசாரணை

நான் காவல்துறையில் பணியில் இருந்து ஓய்வு பெற்று கோவில்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு எட்டையபுரம் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணியில் இருந்தபோது 23.12.2020 அன்று 23 மணியளவில் நிலைய பொறுப்பில் இருந்தபோது நிலைய குற்ற எண் 322/2020 இதச 294(பி), 302 பிரிவுகள் படியான வழக்கின் முதல் தகவல் அறிக்கையை உதவி ஆய்வாளரிடமிருந்து துரித தபாலாக பெற்று 2 வது குற்றவியல் நீதித்துறை நடுவரிடம் 24.12.2020 அன்று அதிகாலை 00.15 மணியளவில் ஒப்படைத்தேன். மேற்படி அலுவலுக்கு எனக்கு வழங்கப்பட்ட கடவுச்சீட்டு **அ.சா.ஆ 12**. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை

எட்டையபுரம் காவல்நிலையத்திலிருந்து இருசக்கர வாகனத்தில் சென்றால் நீதித்துறை நடுவரின் குடியிருப்பிற்கு 30 நிமிடத்தில் செல்லலாம் என்றால் சரிதான். நான் சொன்ன நேரத்திலும், சொன்ன விதத்திலும் முதல் தகவல் அறிக்கையை பெறவில்லை என்றும்,

ஆய்வாளர் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய்சாட்சி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

MUNISWAMI THANDAVAN Digitally signed by MUNISWAMI THANDAVAN Date: 2026.02.27 17:39:32 +0530

I Additional District & Sessions Judge,
Thoothukudi.